**දුරකථන**/தொலைபேசி இல./Telephone Nos.

**අමාත්‍යතුමා** / அமைச்சர் / Minister — 2784832, 2784807, 2784825

**ලේකම්** / செயலாளர் / Secretary — 2784812

**කාර්යාලය** / அலுவலகம் / Office — 2785141-50, **Fax:** 2784846

**ඊමේල්**/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

**ඔබේ අංකය** / உமது இல. / Your No. ..........................

**අධ්‍යාපන අමාත්‍යාංශය**

**கல்வி அமைச்சு**

**Ministry of Education**

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල
'இசுருபாயா' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla.

**මගේ අංකය** / எமது இல. / My No. — ED/05/67/05/02/16

**දිනය** / திகதி / Date — 2017.07- [illegible]


பரீட்சை ஆணையாளர் நாயகம்,

கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,

சகல தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதிகள்,

சகல ஆசிரியர் கல்லூரி அதிபர்கள்,

சகல தேசிய பாடசாலை அதிபர்கள்,

**<u>இணைந்த சேவைகள் உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றம் - 2018</u>**

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் 03/2017 மற்றும் 2017.06.30 ஆம் திகதிய இணைந்த சேவைச் சுற்றறிக்கைக்கமைய இணைந்த சேவை உத்தியோகத்தர்களின் இடமாற்றம் தொடர்பாக,

02. இதற்கமைய தங்களுக்குரிய திணைக்களத்தில்/ தேசிய கல்வியியற் கல்லூரியில்/ ஆசிரியர் கல்லூரியில் அல்லது தேசிய பாடசாலையில் சேவையாற்றும் இணைந்த சேவையின் (அரச மொழி பெயர்ப்பாளர் சேவை/ இலங்கை அரச நூலகப் பொறுப்பாளர் சேவை/ அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை/ அரச பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை/ இலங்கை தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப சேவை/ இணைந்த சாரதிகள் மற்றும் அலுவலக ஊழியர் சேவை) 2017.12.31 ஆம் திகதி தொடக்கம் தமது சேவை இடத்தில் இரண்டு வருடகால சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள வருடாந்த இடமாற்றத்தை எதிர்பார்க்கும் உத்தியோகத்தர்கள் ஊடாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கமைய விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்திசெய்து பதவிக்கமைய உப ஆவணத்தில் தனித்தனியாக இரு பிரதிகளுடன் தயாரித்து இணைந்த சேவைப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்காக எனக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

03. 2018 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள சேவை இடங்களான பரீட்சைத் திணைக்களம்/ கல்வி வெளியீட்டுத் திணைக்களம்/ தேசிய கல்வியியற் கல்லூரி/ ஆசிரியர் கல்லூரி மற்றும் தேசிய பாடசாலைகளுக்கிடையில் உள்ளக இடமாற்றத்தை எதிர்பார்க்கும் இணைந்த சேவைகளின் உத்தியோகத்தர்கள் இத்தால் இணைக்கப்பட்டுள்ள உள்ளக இடமாற்ற விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து 2017.07.11 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும். தகைமைகளைப் பூர்த்தி செய்து வருடாந்த இடமாற்றத்தை எதிர்பார்க்கும் இணைந்த சேவைகளின் சகல உத்தியோகத்தர்களும் **இ.சே/வ.இ.மா/01** மாதிரிப்படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவங்களைப் பூரணப்படுத்தி (தேசிய பாடசாலை மற்றும் ஆசிரியர் கல்லூரிகளில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்ற விண்ணப்பப்படிவத்தை உரிய வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்) 2017.07.31 ஆம் திகதிக்கு முன்னர் இணைந்த

சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கக்கூடியவாறு எனக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். உரிய நிறுவனப் பொறுப்பாளர்களினால் அவ் விண்ணப்பப்படிவங்களை **இ.சே/வ.இ.மா/02** கொண்ட மாதிரிப்படிவத்தின் பதவிகளுக்கமைய தனித்தனியாக உப ஆவணங்களில் பதிவுசெய்து இரு பிரதிகளில் சமர்ப்பிக்க வேண்டும்.

04. இவ் அமைச்சில் மற்றும் அதன் கீழுள்ள திணைக்களங்கள், தேசிய கல்வியியற் கல்லூரி, ஆசிரியர் கல்லூரி அல்லது தேசிய பாடசாலை ஒன்றில் 05 வருடத்திற்கு மேற்பட்ட காலம் சேவையாற்றியுள்ள இணைந்த சேவையின் சகல உத்தியோகத்தர்களினதும் தகவல்கள் (வயது, சேவைக் காலம், தற்போது வதியும் இடத்திலிருந்து தற்போதைய சேவை இடத்திற்குள்ள தூரம் இடமாற்றம் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் இடமாற்றம் பெற்றுச்செல்வதற்கு விருப்பமான 03 இடங்களை உள்ளடக்கி இத்துடன் இணைக்கப்பட்டுள்ள **இ.சே/வ.இ.மா/03** கொண்ட மாதிரிப்படிவத்தை 12 அளவிலான எழுத்துக்கள் **(Font Size - 12)** மற்றும் எழுத்து வகை **(Font) - Iskoola Pota** பயன்படுத்தி **(Microsoft Excel)** மூலம் சரியாகப் பூர்த்தி செய்து **transfer@pubad.gov.lk** என்ற இலத்திரனியல் முகவரிக்கு மென்பொருள் பிரதியுடன் இணைந்த சேவைப் பணிப்பாளர் நாயகத்திற்கு 2017.07.31 ஆம் திகதிக்கு முன்னர் உரிய அவ்வவ் சேவைக்காகத் தனித்தனியான மாதிரிப்படிவத்தைத் தயாரித்து இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். இம் மாதிரிப்படிவத்தைப் பூர்த்தி செய்து அனுப்புவது கட்டாயம் என்பதினால் இது தொடர்பான பொறுப்புக்கள் உரிய நிறுவனப் பொறுப்பாளரினால் ஏற்க வேண்டும்.

05. இடமாற்றம்பெற வாய்ப்பிருப்பதாகக் கருதும் உத்தியோகத்தர் சேவையின் தேவைக்கமைய மேலும் ஒரு வருடம் தமது திணைக்களம் அல்லது நிறுவனத்தில் நிலைப்படுத்தப்படவேண்டும் என திணைக்களப் பொறுப்பாளர் கருதும் பட்சத்தில் (இணைந்த சேவைகள் சுற்றறிக்கை 03/2017 இன் 9:1 இன் கீழ்) அது தொடர்பில் தகவல்களை அறிக்கைப்படுத்துமாறு அறிவிக்கிறேன்.

06. உள்ளக இடமாற்றக் கொள்கை இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**எச். ஹேவகே** -
மேலதிக செயலாளர் (நிர்வாகம் மற்றும் நிதி)

**ஒப்பம்/ சுனில் ஹெட்டிஆரச்சி**
செயலாளர்
கல்வி அமைச்சு

**பிரதிகள் :-**

01. **கல்வி அமைச்சின் சகல பிரிவுகளுக்குப் பொறுப்பான பதவி நிலை உத்தியோகத்தர்கள்**

வருடாந்த இடமாற்றம் தொடர்பில் தங்களது பிரிவில்/ கிளையில் உரிய உத்தியோகத்தர்களை அறிவுறுத்த மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இணைந்த சேவையின் (அரச பொது முகாமைத்துவ உதவியாளர்/ அபிவிருத்தி உத்தியோகத்தர்/ இலங்கை தகவல் மற்றும் தொழில்நுட்ப சேவை) உத்தியோகத்தர்கள் 2018 ஆம் ஆண்டின் அமைச்சில் மற்றும் பரீட்சைத் திணைக்களம்/ கல்வி வெளியீட்டுத் திணைக்களம்/ தேசிய கல்வியியற் கல்லூரிகள்/ ஆசிரியர் கல்லூரி மற்றும் தேசிய பாடசாலைகளுக்கிடையே இடமாற்றம் எதிர்பார்க்கப்படுவதாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள உள்ளக இடமாற்ற விண்ணப்பப்படிவத்திற்கமைய பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பதவிகளுக்கமைய தனித்தனியாக பரிந்துரை செய்து 2017.07.11 ஆம் திகதிக்கு முன்னர் பொதுத் தாபனக் கிளை (இணைந்த சேவை) இற்கு சமர்ப்பிப்பதற்காக,

02. சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்

இவ் அமைச்சின் கீழுள்ள சேவை இடங்களில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் சேவையாற்றியுள்ள தற்போது தேசிய பாடசாலைகளில்/ ஆசிரியர் கல்லூரிகளில் சேவையாற்றும் சகல இணைந்த சேவைகள் உத்தியோகத்தர்களின் தகவல்கள் கொண்ட அவ்வவ் சேவைகளுக்குத் தனித்தனியாக (வலயக் கல்வி அலுவலகம் மூலம்) தயாரிக்கப்பட்ட **இ.சே/வ.இ.மா/03** கொண்ட மாதிரிப்படிவத்தை 12 அளவிலான எழுத்துக்கள் **(Font Size - 12)** மற்றும் எழுத்து வகை **(Font) - Iskoola Pota** பயன்படுத்தி **(Microsoft Excel)** மூலம் சரியாகப் பூர்த்தி செய்து **pmas-transfer@pubad.gov.lk** என்ற இலத்திரனியல் முகவரிக்கு மென்பொருள் பிரதியுடன் இணைந்த சேவைப் பணிப்பாளர் நாயகத்திற்கு 2017.07.31 ஆம் திகதிக்கு முன்னர் உரிய அவ்வவ் சேவைக்காக தனித்தனியான மாதிரிப்படிவத்தைத் தயாரித்து இரண்டு பிரதிகளுடன் பரிந்துரை செய்து சமர்ப்பிப்பதற்காக,

03. சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்

இவ் அமைச்சின் கீழுள்ள சேவை இடங்களில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் சேவையாற்றியுள்ள தற்போது தேசிய பாடசாலைகளில் சேவையாற்றும் சகல இணைந்த சேவை உத்தியோகத்தர்களினதும் தகவல்கள்கொண்ட அவ்வவ் சேவைகளுக்குத் தனித்தனியாகத் தயாரிக்கப்பட்ட **இ.சே/வ.இ.மா/03** மாதிரிப்படிவத்தை 12 அளவிலான எழுத்துக்கள் **(Font Size - 12)** மற்றும் எழுத்து வகை **(Font) - Iskoola Pota** பயன்படுத்தி **(Microsoft Excel)** மூலம் சரியாகப் பூர்த்தி செய்து **pmas-transfer@pubad.gov.lk** என்ற இலத்திரனியல் முகவரிக்கு மென்பொருள் பிரதியுடன் இணைந்த சேவைப் பணிப்பாளர் நாயகத்திற்கு 2017.07.31 ஆம் திகதிக்கு முன்னர் உரிய அவ்வவ் சேவைக்காகத் தனித்தனியான மாதிரிப்படிவத்தைத் தயாரித்து இரண்டு பிரதிகளுடன் பரிந்துரை செய்து சமர்ப்பிப்பதற்காக,